விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 197 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 19 செவ்வாய்க்கிழமை (04.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியை

## ரி.என்.ஏ என அழைக்கும் கோரிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவால் நிராகரிப்பு

### உண்மைக்குப் புறம்பான தகவல் என்கிறது ரெலோ

(கொழும்பு)

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின், ஜனநாயகம் என்ற சொல்லை நீக்கி தமிழ் தேசியக் கூட்டணி என மாத்திரம் செயற்படவும் அதனை ஆங்கிலத்தில் ரி.என்.ஏ என அழைப்பதற்கும் விடுக்கப்பட்ட கோரிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு நிராகரித்துள்ளதாக வெளியாகும் செய்தி உண்மைக்குப் புறம்பானது என ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின், யாப்பை உரு 11

## நிறைவடைந்தது தையிட்டி போராட்டம்



11

### மதில் இடிந்து விழுந்ததில்

## ஒன்றரை வயது குழந்தை பலி

(யாழ்ப்பாணம்)

மதில் மேலால் குழந்தையை தூக்க முற்பட்ட சமயம் மதில் குழந்தை மீது இடிந்து விழுந்ததில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஆண் குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி நேற்று திங்கட்கிழமை 11

## உயிரைப் பறித்த முகநூல் காதல்

### இருபாலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

முகநூல் காதலி தொடர்பை துண்டித்ததன் காரணமாக இளைஞர் ஒருவர் தவறான முடிவு எடுத்து தற்கொலை செய்த சம்பவம் இருபாலை கிழக்கு, இருபாலைப் பகுதியில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் அதே இடத்தை 11

# அரசுடன் இணையாவிடின் மீண்டும் தோல்வியடைவீர்

### எதிர்க்கட்சிகளிடம் தெரிவித்தார் ஜனாதிபதி ரணில்



(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து மீண்டும் தோல்விடையாது அரசாங்கத்துடன் இணைந்து நாட்டை கட்டியெழுப்ப ஒன்றிணையுங்கள்.

மேலும் உங்களுக்கு பொறுப்புக்கள் தர தயாராக இருக்கிறேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கடன் மறுசீரமைப்பு சட்டம் பலவந்தமாக நிறைவேற்றம்

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம்பலவந்தமாகவே தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்டமூலத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. இரவு 9 மணிக்கு பின்னரே வாக்கெடுப்பு நடத்தப்படும் எனக் கூறப்பட்ட போதிலும், 7.30க்கே வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் காரணமாகவே எதிர்க்கட்சியின் பெரும்பாலான பாராளுமன்ற 11

## ரூ.2500 முதல் 3000 இடையில் விலைக்குறைப்பு

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலையை செவ்வாய்க்கிழமை முதல் குறைக்கவுள்ளதாக அந்த நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

12.5 கிலோ கிராம் எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 2500 - 3,000 ரூபாய்க்குள் வரையறுக்கப்படும் 02

### மன்னாரில்

## மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் சடலமாக மீட்பு

### மற்றொருவர் மாயம்

(மன்னார்)

மன்னார் கட்டுக்கரை குளத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை படகு ஒன்றில் மீன் பிடிக்கச் சென்ற 2 மீனவர்கள் காணா 11

## விரைவில் வீதிக்கு இறங்கவுள்ள ஆசிரியர்கள்

### இலங்கை ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

சம்பள முரண்பாடுகளை களைவதற்காக எதிர்வரும் காலத்தில் ஒட்டுமொத்த ஆசிரியர்களையும் வீதியில் இறக்கி போராட்டம் நடத்தப் போவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். 11

## வங்கிகள் இன்று முதல் திறக்கும்

(கொழும்பு)

ஐந்து நாள் விடுமுறைக்குப் பிறகு வங்கிகள் மற்றும் பங்குச் சந்தைகள் இன்று வழக்கம் போல் திறக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில்
42 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நவக்கிரி மாணிக்க பிள்ளையார் கோயில் வீதியில்
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- 3 வருடங்கள் பூர்த்தி அடைந்த தென்னைகள் உள்ளன.
- நிலாவரை வற்றாக்கிணற்றில் இருந்து 1 km தூரம்
- 1 பரப்பின் விலை 1200000 (பன்னிரண்டு இலட்சம்)

பார்வையிடும் நேரம் :
காலை 6 மணி தொடக்கம்
மாலை 6 மணிவரை

தொடர்புகளுக்கு: ஜெயம் (16188)

077 814 7389, 077 986 5457


## புலமைப்பரிசில் பரீட்சை

# 6 ஆம் திகதிக்கு பின்னர் விண்ணப்பங்கள் ஏற்கப்படாது

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரும் நடவடிக்கை எதிர்வரும் 6ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

ஒக்டோபர் 15ஆம் திகதி நடைபெறவுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 6ஆம் திகதி வரை ஒன்லைனில் மேற்கொள்ளப்படும். அன்று நள்ளிரவு 12.00 மணிக்கு மேல் ஒன்லைன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. எக்காரணம் கொண்டும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் காலக் கெடு நீடிக்கப்பட மாட்டாது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜய சுந்தர தெரிவித்துள்ளார்.(4-7)

## அரசுடன்...

அம்பாந்தோட்டையில நேற்று இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

போலியான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு மாறாக அரசாங்கத்தினால் நாட்டின் அபிவிருத்திக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுடன் இணைந்துக் கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான முழு எதிர்க்கட்சிக்கும் அழைப்பு விடுக்கிறேன்.

அவ்வாறு ஒன்றுபடும் பட்சத்தில் நாட்டை முன்னேற்றும் வேலைத்திட்டத்திற்கு பங்களிப்புச் செய்த பெருமிதத்துடன் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கான வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும்.

ஆளும் தரப்பில் இருந்தாலும் எதிர் தரப்பில் இருந்தாலும் நாட்டின் அபிவிருத்திக்காகவும் நாட்டு மக்களுக்குச் சலுகைகளை பெற்றுக்கொடுப்பதற்காகவும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம். அதனை விடுத்து போலியான தர்க்கங்களை முன்வைப்பதால் பயனில்லை. அந்த முயற்சியில் எதிர்க்கட்சி பல தடவைகள் தோற்றுப்போயுள்ளது.

சபாநாயகருடன் கலந்துரையாடி எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு மேலும் பல பொறுப்புக்களை கையளிக்க நான் தயாராகவே உள்ளேன். தற்போதும் அவர்கள் செயற்குழுக்களில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எதிர்வரும் நாட்களில் வரவுச் செலவுத்திட்ட அலுவலகம் திறக்கப்படவுள்ளதால் மேலும் பல பொறுப்புக்கள் உருவாகும். அதனால் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள் எதிர்க்கட்சி அந்தஸ்த்துக்கு பாதிப்பு ஏற்பட நாம் இடமளியோம்." என ஜனாதிபதி உறுதியளித்தார். (4-7)

## ரூ.2500...

வகையில் குறைக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எரிவாயு சிலிண்டர் விலை குறைப்பு தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்றையதினம் வெளியிடப்படும் எனவும் குறிப்பிட்டார். (4-7)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.10.1942

மறைவு 01.07.2023

எமது நண்பன் குருபரன் அவர்களின்
அன்புத் தாயார்

## அமரர் யோகலீலா தேவசுந்தரம்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(16184)

யாழ்.இந்துக் கல்லூரி
2002 உயர்தரப் பிரிவு நண்பர்கள்.

# மரண அறிவித்தல்



## முருகன் இராசாத்தி (பவளம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகன் இராசாத்தி (பவளம்) அவர்கள் 03.07.2023 நேற்று திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - ராமாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் அமரர் ஐங்கனா மற்றும் குகனா, குலம்(லண்டன்), நந்தினா ஆகியோரின் அன்புத் தாயாரும் ரவி(பெற்றோலியக் கூட்டுஸ்தாபனம்), றமேஸ்(லண்டன்), குமாரி(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் தேவி காலஞ்சென்ற நாகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசலிங்கம் காலஞ்சென்ற இரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் அடெம்சியா, கேனுகா, டயுஸ்ரிகா, தரணிகா, டானியல், பியூலா, மதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.07.2023 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக் மினங்குப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
ரவி : 077 555 8485

(16190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற மருந்துகளால்
# நோயாளர்கள் மரணிப்பது அதிகரிப்பு
## சுகாதார அமைச்சு



**(கொழும்பு) கடந்த வாரம் ராகம மருத்துவமனையில் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவத்தை தொடர்ந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட அன்டிபயோட்டிக் மருந்துகளை பயன்படுத்துவதை விலக்கிக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அனைத்து மருத்துவமனைகளையும் கேட்டுக்கொண்டுள்ளது.**

ராகம மருத்துவமனையில் தடுப்பூசி செலுத்தப்பட்டதை தொடர்ந்து 23 வயது தாயார் ஒருவர் உயிரிழந்துள்ளார். 27 ஆம் திகதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பெண்ணே உயிரிழந்துள்ளார்.

குறிப்பிட்ட மருந்து ஒவ்வாமையே அவரின் மரணத்திற்கு காரணமாகயிருக்கலாம் என மருத்துவ ஆய்வக அறிவியல் கல்லூரி தெரிவித்துள்ளது.

அவருக்கு தடுப்பூசி மூலம் வழங்கப்பட்ட அன்டிபயோட்டிக்கின் ஒவ்வாமையே அவரின் மரணத்திற்கு காரணம் என சந்தேகம் நிலவுவதாக ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட மருந்தினால் கடும் ஒவ்வாமை ஏற்படுகின்றது என கடந்த காலங்களில் முறைப்பாடுகள் வெளியான போதிலும் வழமையான ஒவ்வாமை என அந்த முறைப்பாடுகள் நிராகரிக்கப்பட்டதாக மருத்துவ ஆய்வக அறிவியல் கல்லூரியின் தலைவர் ரவிகுமுதேஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சரை கேட்டுக் கொண்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துக்ளினால் நோயாளிகள் மரணிப்பது அதிகரிக்கின்றது என குறிப்பிட்டுள்ளார். சில மருத்துவசிகிச்சைகளும் இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இவை மறைக்கப்படுகின்றன. ஆனால் வழமையானவை என நிராகரிக்கப்படுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ள அவர் பொதுமக்களிடமிருந்து இது தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக சுயாதீன குழுவொன்றை அமைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (நி-5)

## பதிவு செய்யப்படாத
# மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

பதிவு செய்யப்படாத அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன் சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்கு முறை சபையில் பதிவு செய்ய வேண்டும் என்று ஒழுங்கு முறை சபை அறிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தனியார் மருத்துவ நிறுவனங்களின் பதிவுச் சட்டத்தின் விதிகளின்படி, இலங்கையில் உள்ள அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களும் சுகாதார அமைச்சின் கீழ் உள்ள தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

இது தொடர்பில் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கடிதம் மூலம் அறிவித்து உரிய பதிவை மேற்கொள்ளலாம்.

இவ்வாறு பதிவு செய்யாத அனைத்து தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு எதிராகவும் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாகவும் ஒழுங்கு முறை சபை தெரிவித்துள்ளது.

கடந்த நான்கு மாதங்களில் பதிவு செய்யப்படாத சுமார் 1,500 தனியார் மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. (நி-5)

# ராஜபக்ஷக்கள் தலைமையிலான அரசு விரைவில் உதயமாகும் - நாமல் உறுதி



(கொழும்பு)

தேர்தல் ஊடாக ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்துவோம் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கெஸ்பேவ பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது, நாட்டு மக்கள் மத்தியில் ராஜபக்ஷர்கள் தொடர்பில் நல்லதொரு நிலைப்பாடு காணப்படுகிறது.

2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதற்காகவே மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த அரசாங்கத்தையே மகிந்த ராஜபக்ஷ நல்லாட்சி அரசாங்கத்திடம் ஒப்படைத்தார்.

நல்லாட்சி அரசாங்கம் நாட்டை முன்னேற்றுவது குறித்து அவதானம் செலுத்தும் ராஜபக்ஷர்களை பழிவாங்குவதற்கு அவதானம் செலுத்தியது.

ராஜபக்ஷர்கள் மீது போலியான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால் சுமத்தப்பட்ட எந்தக் குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்படவில்லை.

வெளிநாடுகளில் சொத்துக்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளார்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லை என ரணில் விக்கிரமசிங்க பாராளுமனறத்துக்கு அறிவித்துள்ளார்.

அரசியல் பிரசாரத்துக்காகவே ராஜபக்ஷர்கள் மீது பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது.

ஒரு தரப்பினரது தவறான ஆலோசனைகளினால் அரசாங்கம் குறுகிய காலத்துக்குள் பலவீனமடைந்தது.

பொருளாதார பாதிப்பு அரசியல் நெருக்கடியைத் தோற்றுவித்தது. பொருளாதார பாதிப்புக்குத் தீர்வு காண்பதற்காகவே ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தோம்.

அரசியல் ரீதியில் பொதுஜன பெரமுன எடுத்த தீர்மானம் சரியானது என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள தேர்தல்களில் கட்சி என்ற ரீதியில் சிறந்த முறையில் போட்டியிடுவோம். அதன் ஊடாக ராஜபக்ஷர்கள் தலைமையிலான அரசாங்கத்தை வெகுவிரைவில் நடைமுறைப்படுத்துவோம் எனத் தெரிவித்துள்ளார். (நி)

# ஆய்வுகளை மேற்கொள்ள
## நாசா விஞ்ஞானிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

செவ்வாய்க் கிரகத்தில் உள்ள கற்களுக்கும் இலங்கையில் காணப்படும் கற்களுக்கும் உள்ள ஒற்றுமைகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக நாசாவின் விஞ்ஞானிகள் குழு இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாசாவில் மூத்த விஞ்ஞானியான இலங்கைப் பிரஜையான சுனிதிகருணாதிலகே தலைமையிலான நிபுணர்கள் குழுவே இலங்கைக்கு வரவுள்ளது.

அவர்கள் முதலில் கினிகல்பலஸ்ஸ மற்றும் இண்டிகொலபலஸ்ஸ ஆகிய பகுதிகளுக்கு சென்று, பின்னர் நாட்டின் தென்மாகாணத்தில் உள்ள உஸ்ஸங்கொட பகுதிக்கு பயணிக்கவுள்ளனர்.

இந்தநிலையில், இலங்கையின் புவியியல் அம்சங்கள் செவ்வாய்க் கிரகத்தில் உள்ள சில பாறைகள் மற்றும் மண்ணுடன் குறிப்பிடத்தக்க ஒற்றுமையை தீவு உருவாக்குவதைக் காட்டுவதாக சுனிதி கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த, களனி பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கபுகொல்லே ஆனந்த கித்தி தேரர், நீல பளிங்கு பாறை அல்லது நீல் கருடா நிலவுக்கல் அல்லது சந்திர காந்தா என்ற இரண்டு பாறைகள் தொடர்பிலேயே ஆய்வுகள் நடத்தப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (நி)

# இலங்கையில் காலநிலை தொடர்பான ஆய்வு நிலையம் அமைக்க ஜேர்மன் திட்டம்



(கொழும்பு)

இலங்கையில் காலநிலை தொடர்பான ஆய்வு நிலையமொன்றை அமைப்பதற்கு ஜேர்மன் முடிவெடுத்துள்ள நிலையில் அதற்கு ஜேர்மனின் சன்ஃபாமின் நிறுவனம் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது.

அந்த நிறுவனத்தின் தலைவர் பீற்றர் பூமகேவின் தலைமையிலான குழு பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடியுள்ளது.

இதன்போது நவீன விவசாயம் தொழில்நுட்ப தொடர்பாடல் உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

காலநிலைக்காக இந்த விடயங்களைப் பயன்படுத்தும் வகையில் விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை மீள் எரிசக்தி தொழில்நுட்பம் தொடர்பான அறிவை இளைஞர்கள் இதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட பளுதூக்கல் போட்டி

## யாழ்.பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள் இருவர் சாதனை



இலங்கை பாடசாலை பளு தூக்கல் சங்கம் நடத்திய பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த இரு மாணவிகள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

குறித்த போட்டி கடந்த 1ஆம் திகதி கேகாலை பிலிமத்தலாவை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த செல்வி. வி.ஜெஸ்மினா 18 வயதிற்குட்பட்ட 71 கிலோ எடைப் பிரிவில் 92 கிலோ கிராம் பளுவை தூக்கி தங்கப்பதக்கத்தையும் செல்வி. இ.றம்மியா 20 வயதுக்குட்பட்ட 55 கிலோ எடைப் பரிவில் 65 கிலோகிராம் பளுவைத் தூக்கி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்கள். (6-90)

## வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்ட போட்டியில் இலங்கை வங்கி அணி வெற்றி

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட யாழ். மாவட்ட வங்கிகளுக்கு இடையிலான துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இலங்கை வங்கி அணி வெற்றி பெற்றுள்ளது.

மேற்படி சுற்றுத் தொடரில் ஆறு வங்கி அணிகள் பங்குபற்றிய நிலையில் கடந்த மாதம் 29 ஆம் திகதி கந்தரோடை ஸ்கந்தவரோதய கல்லூரியில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் மக்கள் வங்கி வீழ்த்தி இலங்கை வங்கி அணி வெற்றிக் கிண்ணத்தை பெற்றுக் கொண்டது.



இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மக்கள் வங்கி அணி நிர்ணயிக்கப்பட்ட 6பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 51 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் மக்கள் வங்கி அணி சார்பாக ரஜீவன் 15 ஓட்டங்களையும், அங்குசன் 12 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளனர். பந்து வீச்சில் இலங்கை வங்கி அணியைச் சேர்ந்த லக்சன் 2 விக்கெட்டுக்கள்ள கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்கு 52 இலக்குகளை வெற்றி இலக்காக கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை வங்கி அணி 4.4 ஓவர்களில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களை பெற்று நடப்பு ஆண்டிற்கான சம்பியனை தட்டிச் சென்றுள்ளது.

துடுப்பாட்டத்தில் இலங்கை வங்கி அணியைச் சேர்ந்த லக்சன் 24 ஓட்டங்களையும், ஜங்கரன் 19 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

மேற்படி சுற்றுத் தொடரின் சிறந்த வீரராக இலங்கை வங்கி உத்தியோகத்தர் ஜங்கரனும், சிறந்த துடுப்பாட்ட வீரராக மக்கள் வங்கி அணியைச் சேர்ந்த அங்குசனும், சிறந்த பந்து வீச்சாளராக இலங்கை வங்கி அணியைச் சேர்ந்த டக்சனும் தெரிவாகியிருந்தனர். (6-30)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2867

Search for people, places and things Nagendram Home

மதுஷன்




தாரணி




வர்சன்




ஆகாஷ்




சந்தியா




நிரோதிகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திரிபோசாவுக்குப் பதிலாக முட்டை

(கொழும்பு)

திரிபோஷா உற்பத்தியை வழமைக்கு கொண்டு வரும் வரையில் 6 மாதம் முதல் 3 வயதுக்கும் இடைப்பட்ட சிறார்களுக்கு மாற்று போசனை திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அரச குடும்ப நல சுகாதார சேவைகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

சிறார்கள் முட்டைகளை அதிகமாக உண்ணுவதால் திரிபோசாவுக்கு மாற்றீடாக முட்டையை வழங்க அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் என அந்த சங்கத்தின் தலைவர் தேவிகா கொடிதுவக்கு தெரிவித்துள்ளார். (நி-5)

# பேராதனை பல்கலைக்கழகத்தை பார்வையிட சென்ற 2 இலட்சம் மக்கள்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக்கழகத்தை பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்ட தினத்தன்று சுமார் 2 இலட்சம் மக்கள் அங்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் எம்.டி.லமாவங்ச இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 80 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி அதனை பார்வையிடுவதற்கு பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# அதிகரிக்கும் டெங்கு பரவல் மேலும் 4 மரணங்கள் பதிவு

(கொழும்பு)

இலங்கையில் மேலும் 4 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ள அதேவேளை, இந்த வருடத்துக்குள் மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 50 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்று நோயியல் பிரிவின்படி, நேற்று முன்தினம் வரை 49 ஆயிரத்து 559 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதில் அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 10 ஆயிரத்து 879 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஜூன் மாதத்தில் 9 ஆயிரத்து 916 டெங்கு தொற்றாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இது கடந்த ஜனவரி 2023 இற்குப் பிறகு ஒரு மாதத்திற்குள் பதிவான அதிக எண்ணிக்கையாகும். (நி)

# 190 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு

## சுகாதார அமைச்சர் ரம்புக்வெல்ல

(கொழும்பு)

மத்திய மருந்து களஞ்சியசாலையில் 190 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இவ்வருட இறுதிக்குள் 20 வகையான மருந்துகளை நாட்டில் உற்பத்தி செய்ய முடியும் என அமைச்சர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (நி)



# வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தரவுகளுக்கு அமைய கடந்த ஜூன் மாதம் சுமார் ஒரு லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதன்படி, ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 6 இலட்சத்து 25 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 7 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகவும் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ சுட்டிக்காட்டியுள்ளார். (நி-5)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர். சின்னத்துரை உதயணன்

திதி: துதியை 04.07.2023 செவ்வாய்க்கிழமை

மண்ணில்: 01.03.1981 விண்ணில்: 15.06.2022

ஓராண்டு சென்றாலும் உனது பிரிவை
தாங்க முடியவில்லை ஆண்டவன் ஏனோ
தெரியாது பாதி ஆண்டில் பறித்து விட்டான்
உனது அபூர் அப்பா அப்பா என்று
தேடுகின்றது தினைக்கும் போதெல்லாம்
அழ வேண்டும் போல் இருக்கிறது
உனது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

(C-6861)

உனது பிரிவால் துயருறும்: அண்ணா, அம்மா, மனைவி, மகன் அபூர், உற்றார், உறவினர்.

## பெயர்மாற்ற அறிவித்தல்

2 ஆம் திட்டம், இளங்கோபுரம், விசுவமடு எனும் முகவரியைக் கொண்ட செந்தமயில்செல்வி ஆகிய எனது பெயரை இன்று முதல் செந்தமிழ் செல்வி என பெயர் மாற்றம் செய்கின்றேன்.

இனிவரும் காலங்களில் செந்தமிழ் செல்வி எனும் பெயரையே எனது சகல ஆவணங்களிலும் பயன்படுத்துவேன் என இலங்கை சனநாயக குடியரசில் வாழும் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள,
ந.செந்தமிழ் செல்வி.

(18182)

# இராசிபலன்

04.07.2023
ஆனி 19, செவ்வாய்க்கிழமை
பிரதமை பிற்பகல் 3.42 மணிவரை
பூராடம் முற்பகல் 10.25 மணிவரை

சுபநேரம் -10.27-11.57 மணிவரை
இராகுகாலம்-2.57-4.27மணிவரை

சந்திராஷ்டமம்-
ரோகினி, மிருகசீரிடம்

வளவன்




பூர்வீகச் சொத்து சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தொழில் ரீதியாக ஏற்பட்ட மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




வழிபாடு சிறப்புக்களைத் தரும், தொலைபேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம், சச்சரவை விட்டு சாதித்துக் காட்ட வேண்டிய நாள்.




வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.




திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறலாம், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.




பணத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.




நண்பர்களின் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும் நாள்.




பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.




பேச்சில் இனிமை தெளிவுபடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பெற்றோர்கள் மீதான பாசம் கூடும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.





திடீர் பயணங்களால் பணிகளில் சுணக்கம் ஏற்படும், குடும்பத்தினை அனுசரித்துச் செல்வது நல்லது, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தொழில் சம்மந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

ஒரு மனிதனை அவனது நண்பர்கள் மூலமாகவும் எதிரிகள் மூலமாகவும் மதிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தீர்த்தத் திருவிழா நேற்று திங்கட்கிழமை காலை பத்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்: சிவசாந்தன்)

# உதைபந்தாட்ட லீக்கின் தலைவராக செயற்பட்ட ஆனோல்ட்டுக்கு தற்காலிகத் தடை

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவராகச் செயற்பட்ட இம்மானுவேல்ஆனோல்ட்டுக்கு தற்காலிக தடை விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் யாப்பின்படி தலைவர் மற்றும் செயலாளர் இரண்டு தடவைகளுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியாது எனவும் யாப்புக்கு புறம்பாக பதவிகளைப் பிடித்திருக்கும் இம்மானுவேல் ஆனோல்ட் மற்றும் அஜித்குமாரை உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மற்றும் செயலாளர் பதவிகளிலிருந்து நீக்கி கட்டளையிடுமாறும் தலைவர் பதவிக்கு உரியமுறையில் போட்டியிட்டு தலைவைர் என்ற கட்டளையை வழங்குமாறும் வழக்காளி மாணிக்கவாசகர் இளம்பிறையன் கோரினார்.

இந்த வழக்கு யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, கலாநிதி குமாரவேல் குருபரன், வழக்காளியின் கோரிக்கைகள் தொடர்பில் நீண்ட சமர்ப்பணத்தை முன்வைத்ததுடன், வழக்கை ஆராய்ந்து யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் மற்றும் செயலாளரை அந்தப் பதவியில் செயற்பட கட்டாணை வழங்குமாறு விண்ணப்பம் செய்தார்.

வழக்காளியின் விண்ணப்பத்தை ஆராய்ந்த மன்று, 14 நாட்களுக்கு கட்டாணையை வழங்கி எதிராளிகளுக்கு சேர்ப்பிக்க கட்டளையிட்டது.

எதிராளிகள் தமது ஆட்சேபனையை முன்வைக்க ஏதுவாக வழக்கு எதிர்வரும் 12ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது. (நி-5-6)

# வலி. தெற்கு முச்சக்கரவண்டி சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு முச்சக்கர வண்டி சங்கத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் கடந்த மாதம் 18 ஆம் திகதி வலி. தெற்கு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் தலைவர் சிவசுப்பிரமணியம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் புலைமைப் பரிசில், க.பொ.த.சாதாரண, உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த சங்கத்தின் அங்கத்தவர்களுடைய பிள்ளைகளுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு இறந்த அங்கத்தவரின் உறவினர்களுக்கும் கொடுப்பனவு வழங்கி வைக்கப்பட்டன.

இதில் பிரதேச சபை நிர்வாக செயலாளர், சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிஎம்.எப்.எம்பிரவுடஸ், போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி காரியவசம் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-5-6)

# 30 லீற்றர் கோடா, கசிப்பு மீட்பு

## ஒருவர் கைது



(அராலி)

யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அண்மையில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட 28 வயதுடைய அதே இடத்தை சேர்ந்த நபர் ஒருவர் பொலிஸ்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் 30 லீற்றர் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து குறித்த கைது சம்பவம் இடம்பெற்றுள்ளது. (நி-5-6-33)

# கட்டுப்பாட்டை இழந்த மோ.சைக்கிள் மதிலுடன் மோதி விபத்து

## இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டினை இழந்து வீட்டு மதிலுடன் மோதிய தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்ற இளைஞன் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

இதில் மட்டுவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான இளைஞன் ஒருவரே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்துத்தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-5-6-30)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் வரியிறுப்பாளர்களின் நன்மை கருதி நாளை புதன்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 3 மணிவரை நடமாடும் சேவை பாசையூர் புனித அந்தோனியார் ஆலய பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

19 மற்றும் 20 ஆம் வட்டாரங்களிற்கான ஆதனவரி அறிவித்தல் படிவம் / சோலை வரி வழங்கல், பெயர்மாற்ற விண்ணப்பப்படிவம் வழங்கல், துவிச்சக்கரவண்டி உரிமம் வழங்கல் போன்ற சேவைகளை வழங்குவதுடன் பொது மக்களால் இதுவரை காலமும் செலுத்தாதுள்ள ஆதனவரி நிலுவைகள் மற்றும் நடப்பாண்டு ஆதனவரி, நீர் வழங்கல் கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றை பெற்று யாழ். மாநகர சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அத்துடன் நடப்பாண்டின் ஆதன வரியினை முழுமையாக செலுத்தும் பட்சத்தில் மூன்றாம், நான்காம் காலாண்டுக்கான ஆதனவரியின் 5% கழிவினைப் பெற்றுக் கொள்ள முடியும் என யாழ்.மாநகர ஆணையாளர் அறிவித்துள்ளார். (நி-5-6)

# திஸ்ஸ விகாரைக்கு எதிராக தையிட்டியில் நேற்றும் போராட்டம்



(அராலி)

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர்போராட்டமான 3 ஆவது கட்ட போராட்டத்தின் இரண்டாவது நாள் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று போயா தினம் என்பதால் குறித்த விகாரையில் வழிபாடுகள் இடம்பெறவுள்ள நிலையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு பதாகைகளை ஏந்தி கோஷமிட்டவாறு தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர். (நி-5-6-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





கோண்டாவில் சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழா நேற்று சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் கோண்டாவிலில் உள்ள சிவபூமி பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையின் இருபதாவது ஆண்டுப் பூர்த்தி விழா சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (படங்கள்: சிவசாந்தன்)

## சீனித் தொழிற்சாலை விவகாரம்

# வவுனியாவிற்கு வரும் முதலீடு என்பதால் எல்லோரிடமும் கலந்துரையாடி முடிவெடுப்போம்

## செல்வம் எம்.பி

(குருமன்காடு)

சீனித் தொழிற்சாலை வவுனியாவிற்கு வரும் முதலீடு என்ற அடிப்படையில் எங்களது மக்களின் கருத்துக்களையும் இங்குள்ள அரசியல்வாதிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள் ஆகியோரது கருத்துக்களையும் பெற்ற பின் தான் இங்கு கொண்டு வருவதா இல்லையா என முடிவெடுப்போம் என தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ அமைப்பின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது வவுனியாவில் சீனித்தொழிற்சாலை அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனித் தொழிற்சாலை தொடர்பில் 4 ஆவது தடவையாக அமைச்சரவை அனுமதி கிடைத்திருக்கின்றது. ஆனாலும் நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவில்லை. நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதாக சொல்லப்பட்ட போதிலும் முதலீட்டாளர்கள் இன்னும் தமது கருத்துக்களை சொல்லவில்லை. எம்மைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலை இயக்கம் இந்தியாவுக்கு எதிரான எந்தவொரு விடயங்களையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை.

சீனித் தொழிற்சாலையால் சிங்கள குடியேற்றம் வரும். சீனா வரும் என நிரூபிக்க முடிந்தால் நிரூபிக்கவும். அதை விடுத்து சும்மா குத்திமுறிவதால் எந்தப் பயனும் இல்லை மக்களின் நலன், விவசாயிகளின் நலன் ஏன்பன பற்றி கவனம் செலுத்தி வவுனியா மக்களோடு கலந்தாலோசித்து எமது கருத்தை சொல்ல இருகின்றோம்.

வவுனியா மக்கள் விரும்பவில்லை என்றால் சிங் கள் இடத்திற்கு போகட்டும். மக்கள் அபிப்பிராயம் பெற்று தான் நாம் முடிவெடுப்போம் எனத் தெரிவித்தார். (நி-5-6-250)

# புத்தூர் சம்பவம் தொடர்பில் மேலும் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூரில் வீடொன்றுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை தாக்கி சொத்துக்களை சேதப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இதுவரையில் 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக குறித்த சம்பவம் தொடர்பில், கைதான 25 பெண்கள் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், 6 பேரை எதிர்வரும் 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதி மன்றினால் உத்தரவிடப்பட்டது.

இந்தநிலையில் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் மேலும் 3 சந்தேகநபர்கள் நீர்வேலி மற்றும் மடத்தடி பகுதிகளைச் சேர்ந்த 20, 25, மற்றும் 28 வயதுடைய குறித்த நபர்களே நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5-6-33)

## சந்தைகளில் நேற்றைய விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 200 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 210 | 240 |
| பச்சைமிளகாய் | 700 | 700 | 600 | 800 |
| தக்காளி | 420 | 400 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 240 | 200 | 300 |
| கோவா | 300 | 300 | 300 | 300 |
| கரட் | 350 | 500 | 500 | 600 |
| பூசணி | 140 | 120 | 100 | 120 |
| புடோல் | 200 | 220 | 180 | 250 |
| வாழைக்காய் | 130 | 180 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 380 | 340 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 130 | 140 |
| பாகற்காய் | 600 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 300 | 250 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 180 | 240 |
| பயற்றங்காய் | 400 | 600 | 300 | 250 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 400 | 450 |
| கறிமிளகாய் | 350 | 300 | 400 | 450 |
| முருங்கைக்காய் | 800 | 600 | 500 | 600 |
| போஞ்சி | 550 | 450 | 450 | 550 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | -- | 280 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 250 | 200 | 300 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 420 | 400 | 500 | 700 |
| முள்ளங்கி | 180 | 100 | 180 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 50 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | -- | 200 |

# யாழ்.நோக்கி பயணித்த சிறியரக வாகனம் விபத்து

## ஒருவர் படுகாயம்



(தருமபுரம்)

ஏ-9 வீதியில் யாழ்.நோக்கி பயணித்து கொண்டிருந்த சிறிய ரக வாகனம் ஒன்று வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்க மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுக்காட்டுச்சந்தி பகுதியில் ஏ-9 வீதியில் யாழ்நோக்கி விற்பனை பொருட்கள் ஏற்றி வந்த சிறிய ரக வாகனம் ஒன்றே வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியின் மறுபக்கம் மின் கம்பத்துடன் மோதுண்டு நேற்று விபத்துக்குள்ளானது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான வாகன சாரதி பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனார். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர். (நி-6-316)

# யாழில் வெடிமருந்துகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாசையூர் கடற்கரையை அண்மித்த பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் இருந்து வெடிமருந்துகள் மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ். விசேட பொலிஸ் அதிரடி படை யினருக்கு தகவல் வழங்கப்பட்டு குறித்த வெடிமருந்துகள் நேற்று திங்கட்கிழமை மீட்கப் பட்டுள்ளன.

பொதி ஒன்றினுள் இருந்தே 20 ஜெலட்டின் குச்சிகளே அவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்ட ஜெலட்டின் குச்சிகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக யாழ்.பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஜெலட்டின் குச்சிகளில் உள்ள வெடிமருந்துகளை பிரித்தெடுத்து, மீன்பிடிக்கான



டைனமேட் தயாரிக்க மீனவர்கள் பயன்படுத்துவதும் குறிப்பிடத்தக்கது. (நி-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 220





"பழுவேட்டரையர்கள் என்னை வேட்டையாடிப் பிடிக்க நாலாபுறமும் ஆட்களை ஏவியிருக்கிறார்கள். என் உயிர் நண்பனாயிருந்த கந்தமாறன் நான் அவனை முதுகில் குத்திக் கொல்ல முயன்றதாக எண்ணிக் கொண்டிருக்கிறான். ஆழ்வார்க்கடியான் என்னும் வீர வைஷ்ணவ வேஷதாரி ஒருவன் என்னைத் தொடர்ந்து கொண்டிருக்கிறான். பழவூர் இளையராணி நந்தினிதேவி என் மீது ஒரு மந்திரவாதியை ஏவி விட்டிருக்கிறாள். எந்த நிமிஷத்தில் யாரிடம் நான் அகப்பட்டுக் கொள்வேனோ, தெரியாது."

வெள்ளத்திலிருந்து கரையேறித் தப்பிய அன்றிரவு மந்திரவாதியுடன் நேர்ந்த அனுபவம் வந்தியத்தேவனுக்கு நினைவு வந்தது. பகலில் பிரயாணம் செய்வதன் அபாயத்தை எண்ணி மூங்கில் காடுகளிலும் வாழைத் தோப்புகளிலும் அவன் பொழுது போக்கினான். இரவில் நதிக்கரையோடு நடந்து சென்றான். வெகுதூரம் நடந்து களைத்து இரவு மூன்றாம் ஜாமத்தில் ஒரு பாழடைந்த பழைய மண்டபத்தை அடைந்தான். வெளியில் நிலா மதியம் பட்டப் பகல் போலப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மண்டபத்துக்குள்ளேயும் சிறிது தூரம் நிலா வெளிச்சம் புகுந்து பிரகாசப்படுத்திக் கொண்டிருந்தது. வெளிச்சமாயிருந்த பகுதியைக் கடந்து இருளடைந்த பகுதிக்குச் சென்று வந்தியத்தேவன் படுத்துக் கொண்டான். கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்த சமயத்தில் வெகு சமீபத்திலிருந்து ஆந்தையின் அகோரமான குரல் வந்தது. பழுவூர் இளையராணியுடன் லதா மண்டபத்தில் பேசிக் கொண்டிருந்த போது அதே மாதிரி ஆந்தைக் குரல் கேட்டது அவனுக்கு நினைவு வந்து திடுக்கிட்டு எழுந்தான். உள்ளே இருட்டின் பகுதியிலிருந்து இரு சிறிய ஒளிப் பொட்டுகள் அவனை உற்று நோக்கின.

வெளியிலே போய் விடலாம் என்று எண்ணி இரண்டு அடி நடந்தான். வெளியிலிருந்து யாரோ உள்ளே வரும் காலடிச் சத்தம் கேட்டது. இடிந்து விழுந்து கரடுமுரடாயிருந்த தூண் ஒன்றைப் பிடித்துக் கொண்டு அதன் மறைவில் நின்றான். வெளியிலிருந்து வந்தவன் முகம் நிலா வெளிச்சத்தில் கொஞ்சம் தெரிந்தது.

பழுவூர் ராணியைப் பார்க்க வந்த மந்திரவாதிதான் அவன் என்பதைத் தெரிந்து கொண்டான். மந்திரவாதி அந்தத் தூணை நோக்கியே வந்தான். தான் அவ்விடம் மறைந்திருப்பது அவனுக்குத் தெரியாது என்றும் தன்னைக் கவனியாமல் மண்டபத்துக்குள்ளே போய் விடுவான் என்றும் வந்தியத்தேவன் நினைத்தான். ஆனால் தூணின் அருகில் வரும் வரையில் மெள்ள மெள்ளப் பூனை போல நடந்து வந்த மந்திரவாதி திடீரென்று கோரமான குரலில் ஒரு கூச்சல் போட்டுக் கொண்டு வந்தியத்தேவனுடைய கழுத்தை ஒரு கையினால் பிடித்து நெறித்தான்.

"எடு! அந்தப் பனை இலச்சினை மோதிரத்தைக் கொடு! கொடுக்காவிட்டால் உன் கழுத்தை நெறித்துக் கொன்று விடுவேன்!" என்று கத்தினான்.

வந்தியத்தேவனுடைய கழுத்து முறிந்து விடும் போலிருந்தது அவனுடைய விழிகள் பிதுங்கி வெளி வந்து விடும் போலிருந்தன. மூச்சுத் திணறியது. எனினும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டான். அந்தப் பழைய தூணை ஒரு கையினால் அழுத்திக் கொண்டு ஒரு காலைத் தூக்கிப் பூரண பலத்தையும் பிரயோகித்து ஓர் உதை விட்டான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## செல்வந்தன் குதிரை

செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்த செல்வந்தன் ஒருவன் பல ஊர்களுக்கு வணிகம் செய்வதற்காகச் செல்ல வேண்டி இருந்தது. இதற்காக விலை உயர்ந்த குதிரை ஒன்றையும் அவன் வாங்கி வைத்திருந்தான். அந்தக் குதிரை காற்றை விட வேகமாக ஓடக் கூடியது.



அந்தக் குதிரையின் வேகத்திற்கு இணையாக எந்தக் குதிரையாலும் ஓட முடியவில்லை. அவனும் அந்தக் குதிரையின் அருமை தெரிந்து அதை நல்ல முறையில் கவனித்து வந்தான்.

அந்த நகரத்தில் வாழ்ந்த அனைவருக்கும் அந்த குதிரையைப் பற்றியும் அதன் வேகத்தைப் பற்றியும் தெரிந்திருந்தது. ஒருமுறை வணிக வேலையாக தொலைவிலிருந்த நகரத்துக்குக் குதிரையில் சென்ற அவன் தான் கொண்டு சென்ற பொருட்களை உடனுக்குடன் விற்று நிறைய பணம் சம்பாதித்தான். அந்தப் பணத்துடன் அந்த நகரத்தில் இருக்க விரும்பாத அவன் உடனே வீடு திரும்ப விரும்பினான்.

குதிரை சற்று கூட ஓய்வெடுக்க முடியாமல் களைத்துப் போயிருந்தது. வணிகனும் உடனே திரும்ப வேண்டி வந்ததால், குதிரையை மெதுவாக ஓட்டிச் செல்வோம் என்று அந்தக் குதிரையின் மேல் அமர்ந்தான்.

காட்டு வழியாக குதிரையில் வந்து கொண்டிருந்த அவனை குதிரையோடு வழிப்பறித் திருடர்கள் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள். முதலாளியைக் காப்பாற்ற விரும்பிய அந்தக் குதிரை திருடர்களைக் காலால் உதைத்துத் தள்ளியபடி முன்னால் ஓடத் துவங்கியது. திருடர்களும் குதிரையைத் தாக்கத்துவங்கினார்கள். குதிரையின் உடலெங்கும் காயம் ஏற்பட்டது.

அந்தக் காயத்தைப் பொருட்படுத்தாத குதிரை தன் முதலாளியைக் காப்பாற்றும் நோக்கத்தில் வேகமாக ஓடத் துவங்கியது. திருடர்கள் வந்த குதிரையால் இந்தக் குதிரையின் வேகத்தைப் பிடிக்க முடியவில்லை.

குதிரை தன் முதலாளியை வீட்டில் கொண்டு வந்து சேர்த்ததுடன் வாயில் நுரை தள்ளியவாறு அப்படியே மயங்கி விழுந்தது. தன் உயிரையும் பொருளையும் காப்பாற்றித் தந்த அந்தக் குதிரையை நன்றியோடு பார்த்த முதலாளி வீட்டுக்குள் சென்றான். அங்கிருந்த பணியாட்கள் அந்தக் குதிரையின் மயக்கத்தை தெளிவித்தார்கள். அதற்கு உணவு அளித்தார்கள்.

அதன் உடலெங்கும் ஏற்பட்ட காயம் ஆறப் பல நாட்கள் ஆகியது. அந்தக் குதிரை நலமடைந்து விட்டாலும் அதனால் முன் போல் வேகமாக ஓட முடியவில்லை. நொண்டியபடியே நடந்தது.

பயனற்ற அந்தக் குதிரையைச் செல்வந்தன் கவனிக்கவில்லை. அதன் கண்களும் பார்வை இழக்கத் துவங்கின. அதன் நிலை பரிதாபமாக ஆனது. பயனற்ற குதிரையால் தேவையற்ற செலவு வருவதாக எண்ணிய அந்த செல்வந்தன், அந்தக் குதிரையை வீட்டை விட்டு விரட்டும்படி பணியாட்களுக்குக் கட்டளையிட்டான். பணியாட்களும் அந்தக் குதிரையை வெளியே தள்ளி கதவைத் தாழிட்டார்கள்.

பசியால் துடித்த அது நகரம் முழுவதும் அலையத் துவங்கியது. அந்நகரத்தில் யாருக்காவது ஏதேனும் குறை ஏற்பட்டால் ஊர் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மணியை அடிப்பார்கள். உடனே அந்த ஊரின் முக்கியமான பெரியவர்கள் கூடி அவரின் குறையைத் தீர்த்து வைப்பார்கள். அது அந்த ஊரின் வழக்கமாக இருந்தது. பசியுடன் வந்த குதிரை அந்த மணிக்காகக் கட்டப்பட்டிருந்த கயிற்றை வைக்கோல் என நினைத்துத் தின்பதற்காக அதைப் பிடித்து இழுத்தது. மணியோசை கேட்டு வந்த அந்த நகரப் பெரியவர்கள் அந்தக் குதிரையைப் பார்த்தார்கள்.

எலும்பும் தோலுமாக இருந்த அந்தக் குதிரையைப் பார்த்த பெரியவர்கள் அது செல்வந்தனின் குதிரை என்பதையும் செல்வந்தனை திருடர்களிடமிருந்து காப்பாற்றிய குதிரை அது என்பதையும் அறிந்து செல்வந்தனை விசாரணைக்காக வரச்செய்தார்கள்.

அவனோ இந்தக் குதிரை பயனற்றது, அதனால் விரட்டிவிட்டேன். என்மீது எந்தத் தவறுமில்லை என்று வாதிட்டான். இந்தக் குதிரை எவ்வளவு அருமையான குதிரை. எவ்வளவு வேகமாக ஓடியது. உன்னைத் திருடர்களிடமிருந்து காப்பாற்றியதால் தானே இது இப்படி ஆனது. உன் உயிரைக் காப்பாற்றிய இந்தக் குதிரையிடம் உமக்கு சிறிது கூட நன்றி இல்லையா?

இதற்கு நாள்தோறும் நல்ல உணவு அளித்துப் பாதுகாக்க வேண்டியது உன் பொறுப்பு. ஒவ்வொரு வாரமும் எங்களில் ஒருவர் வந்து இந்தக் குதிரையைப் பார்வையிடுவோம். இந்தக் குதிரைக்கு ஏதேனும் தவறு நேர்ந்தால் உமக்குக் கடுமையான தண்டனை கிடைக்கும் என்று தீர்ப்பு வழங்கினார்கள். தலை கவிழ்ந்த அந்த செல்வந்தன் அந்தக் குதிரையைத் தன் வீட்டிற்கு ஓட்டிச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே! நம்மில் ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே!

– பாரதி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்

உலகை நேசித்த பாரதி தனித்து கவிதைகளோடு மட்டும் தன்னை அடையாளப்படுத்தவில்லை.

மாறாக,, அத்தனை ஜீவராசிகளையும் அவன் நேசித்தான். அடிமைத்தனம் கண்டு கொதித்தான். பெண் விடுதலைக்காகக் குரல் கொடுத்தான்.

காடு, மலை, ஆறு, நதி என இயற்கையை வியந்து பாடிய பாரதி கொத்தித் திரியும் காகத்தையும் பாலைத் தரும் பசுவையும் வாலை ஆட்டி வரும் நாயையும் நேசித்தான்.

நம்மை அண்டி வாழும் ஜீவராசிகளுக்கு உணவிடல் வேண்டும் என்று பாடிய பாரதியின் நெகிழ்ந்த உள்ளத்தின் உயர்வை அவனின் கவிதைகள் நமக்கு அடையாளப்படுத்தி நிற்கிறது.

ஆம், வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்று பாடிய பாரதி; தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தையே அழித்திடுவோம் என்று கர்ச்சித்தான்.

ஆம், இந்த உலகில் பசி என்பது மிகவும் கொடுமையானது. அதனிலும் கொடியது. சிறுபராயத்தில் எழுந்த பசியைத் தணிக்க வழியில்லா வறுமை.

எனவேதான் வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் என்று பாரதி ஓங்கி ஒலித்தான்.

பாரதி அன்று உரைத்ததை இன்று நடைமுறைப்படுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது.

ஆம், இன்றைய சூழ்நிலையில் எல்லோருக்கும் உணவளிக்கும் அன்னதானம் பற்றி நாம் சிந்திக்க் வேண்டியவர்களாக உள்ளோம்.

உண்மை, சமகால சூழலில் பெரும்பாலான கோயில்களின் மகோற்சவத்தின்போது அன்னதானம் வழங்கப்படுகின்றது. இஃது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

அதேநேரம் ஆலயங்கள் ஒன்றுபட்டு வாரத்தில் ஒருநாள் ஓர் ஆலயம் என்ற அடிப்படையில் அன்னதானம் வழங்கினால், அது மிகப்பெரும் புண்ணியமாகும்.

அதேநேரம் வாரம் முழுவதும் உணவளிக்கக்கூடிய மிகப் பெரும் தர்மப் பணியும் இதனூடு நடந்தாகும்.

ஆகையால் அன்புக்குரியவர்களே! இன்றைய பொருளாதாரச் சூழ்நிலை ஏழை மக்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது.

ஒருநேர உணவுக்காக ஏங்குகின்ற அவலம் வெளிவராத உண்மை.

பொருட்களின் விலையேற்றமும் உழைப்பாளர் இல்லாத வெறுமையும் சேர்ந்து ஏழை மக்களை வாட்டி வதைக்கிறது.

எனவே இந்த நிலையில், செல்வந்தர்கள் மற்றும் பரோபகாரிகள் முன்வந்து ஆலயங்களில் அன்னதானம் செய்ய வேண்டும்.

இந்தப் புண்ணியத்தைச் செய்வதன் மூலம் ஏழை மக்களை வாழ வைக்கின்ற பெருங் கைங்கரியத்தைச் செய்ய முடியும்.

# ஜனநாயகம் முடக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியே தற்போது இடம்பெறுகிறது

## பேராயர் கர்தினால்

(மன்னார்)

நாட்டில்உற்பத்திப் பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்று அதன்ஊடாக பணத்தைப்பெற்று உணவு உண்ண வேண்டும் என்பதை ஊக்குவிக்கக் கூடாது என வலியுறுத்தியுள்ள பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை நாட்டில் மக்களின் விருப்பங்களுக்கு முன்னுரிமையளிக்காது சர்வாதிகார ஆட்சியே முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மன்னார் மடு திருத்தலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஆராதனையின் போது இதனைத் தெரிவித்துள்ள பேராயர் அங்கு மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலத்துக்கு 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 120 பேர் மாத்திரமே விருப்பம் தெரிவித்துள்ளனர்.ஏனையோர் முடியாது என்றும் சிலர் எதுவுமே தெரிவிக்காமலும் பின்வாங்கியுள்ளனர். எனவே குறித்த சட்ட மூலம் பெரும்பாலான மக்களின் விருப்பத்துடன் நிறைவேற்றப்படவில்லை.

இந்த சட்ட மூலத்தின் ஊடாக மக்களின்பணத்தை தனது விருப்பத்துக்கேற்ப பயன்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரத்தில் 250 மில்லியன் டொலர்கள் இலஞ்சமாகப் பெறப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் தெரிவித்திருந்தார். எனினும் இதுவரையிலும்அது தொடர்பில் எந்தவொரு விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை. தற்போதைய ஆட்சியாளர்கள் தேர்தலில் போட்டியிட்டால் எவருக்கும் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள்.

மக்களின் விருப்பத்துக்கு முன்னுரிமையளிக்காத ஜனநாயகம் முடக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சியே தற்போது காணப்படுகிறது.

நாட்டில் உற்பத்தி பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டுமே தவிர தேசிய சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்று அதன் ஊடாக பணத்தைப் பெற்று உணவு உண்ண வேண்டும் என்பதை ஊக்குவிக்கக் கூடாது.

ஆனால் இந்த அரசாங்கம்அதனையே செய்து கொண்டிருக்கிறது. தற்போதைய ஆட்சியாளர்களுக்கு மாத்திரமின்றி சகலருக்கும் இது பொருந்தும்.

இந்த நிலைமையை மாற்றியமைக்காவிட்டால் இனிவரும் காலங்களில் முற்று முழுதாக ஏனைய நாடுகளிடம் கையேந்தும் நாடாக இலங்கை மாற்றமடைந்து விடும்.

இவ்வாறான நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு பொருளாதார மேம்பாட்டு வேலைத்திட்டங்களில் அவதானம்செலுத்த வேண்டும். அவ்வாறன்றி 2048 இல் இலங்கை அபிவிருத்தியடைந்த நாடாகும் என்று போலியான கனவை எமக்கு வழங்க முயற்சிக்க வேண்டாம் என்றார்.(4-7)

## மசகு எண்ணெயின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, நேற்று ப்ரெண்ட் ரக மசகு எண்ணெயின் விலை 75.21 அமெரிக்க டொலராக பதிவாகியுள்ளது. இது கடந்த வெள்ளிக்கிழமையுடன் ஒப்பிடும் பொழுது, 0.3 வீத வீழ்ச்சி ஆகும்.

அமெரிக்க டொலரின் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் உலக சந்தையில் ஏற்பட்ட புதிய வர்த்தக தலையீடுகள் காரணமாகவும் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7)

## 15 மில். பெறுமதியான தங்க நகைகள் திருட்டு மூவர் கைது

பொரலஸ்கமுவவில் 15 மில்லியன் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரலஸ்கமுவ கட்டுவாவல பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் பணிப்பெண்ணை கத்தியை காட்டி மிரட்டி சந்தேக நபர்கள் கொள்ளையடித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

திருடப்பட்ட பொருட்களில் அமெரிக்க டொலர்கள் உட்பட பல வகையான தங்க நகைகள் மற்றும் பணம் இருந்துள்ளது.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்ட போது அவர்களிடம் இருந்து கைக்குண்டு மற்றும் 24 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது. (4-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக **நாளை காலை 8.30 மணியில் இருந்து மாலை 17.00 மணி வரை யாழ். பிரதேசத்தில்** ஆவரங்கால்சந்தை, ஆவரங்கால் சிவன் கோவில், கலைமகள் சந்தி, புத்தூர், நாவற்காடு- அச்சுவேலி, பெரிய பொக்கணை, புத்தூர், ஊறணி, வாதரவத்தை, வீரவாணி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** பூவரசங்குளம், சாளம்பைக்குளம், சாளம் பைக் குளம் வீட்டுத் திட்டம், சோபாலாபுளியங் குளம், தாலிக்குளம், ஆசிக் குளம், மகாறம்பைகுளம், பம்பை மடு பல்கலைக்கழகம், வவுனினயா பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், சாளம்பை புதிய வீட்டுத்திட்டம், சாளம்பைக் குளம் பல்கலைக்கழக வளாகம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி போதனாவில்

## கழிவுநீர் வடிகாலிலிருந்து எட்டுமாத கரு மீட்பு

கண்டி தேசிய வைத்தியசாலையின் கர்ப்பிணிப் பிரிவுக்கு அருகில் உள்ள கழிவுநீர் வடிகாலில் இருந்து எட்டு மாத மனித கரு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வடிகால் அமைப்பை சுத்தம்செய்ய சென்ற தொழிலாளி ஒருவர் அதை பார்த்து வைத்தியசாலை அதிகாரிகளுக்கு தகவல்கொடுத்தார்.

இது தொடர்பில் கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரேஷா பெர்ணாண்டோ தெரிவிக்கையில்,

கண்டி தேசிய வைத்தியசாலையின் கர்ப்பிணிப் பிரிவில் உள்ள தாயொருவர் இதனை வடிகாலில் வீசியிருக்கலாம். எனினும் அந்த தாய் தொடர்பில் இதுவரையில்தகவல்எவையும் கிடைக்கவில்லை என தெரிவித்தார்.

இந்தமனிதகருவிலங்குகளால்இழுத்துச் செல்லப்பட்டு இந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாகவும், கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரேத அறையில் மனித கரு வைக்கப்பட்டுள்ளதாகவும் சட்ட வைத்திய அதிகாரி பரிசோதிக்கும் வரையில் உறுதியான தகவல் இல்லை எனவும் பணிப்பாளர் தெரிவித்தார்.(4-7)

## மருந்தினால் பார்வை இழந்த அனைவருக்கும் இழப்பீடு

கொழும்பு கண் வைத்தியசாலை மற்றும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் கண் சத்திரசிகிச்சையின் பின்னர் கண் பார்வை இழந்த அனைவருக்கும் நட்ட ஈடு வழங்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

ஒரு தொகுதி மருந்துகளில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவை திருப்பி அனுப்பப்பட்டதாகவும், இந்த சம்பவத்தின் பின்னர் சம்பந்தப்பட்ட நிறுவனம் கறுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மருந்து கையிருப்பில் ஒரு தொகுதியில் பக்டீரியா தொற்று காரணமாக இந்த நிலை ஏற்பட்டதாகவும் அவர் கூறினார். இந்த நஷ்டஈடு கொடுப்பனவுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் சம்பவம் தொடர்பில் எவரும் பொறுப்பு கூறலிலிருந்து தட்டிக் கழிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார். (4-7)

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



**எல்லாளன் பற்றி மகாவம்சம் (இணையத்திலிருந்து)**

எல்லாளன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவனது நீதி தவறாத ஆட்சியைப் புகழ்ந்துரைக்கும் பாளி நூல்கள், இவர் தவறான மார்க்கத்தினை (இந்து மதத்தினை) தழுவியவன் எனவும் கூற பின்நிற்கவில்லை. இவன் தனது ஆட்சியில் பௌத்த மதத்திற்கு ஆதரவு அளித்த போதிலும், தன் பழைய மத நம்பிக்கையைக் கைவிடவில்லை என மகாவம்சம் கூறுகிறது. எல்லாளன் பகைவர்க்கும் நண்பர்க்கும் சமநீதி வழங்கியதாக கூறும் மகாவம்சம், அவனது நீதி நெறி தவறாத ஆட்சியை மனு நீதிச்சோழனின் கதைகளோடு இணைத்து விபரித்துள்ளது. எல்லாளனின் படுக்கை அறையில் ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. நீதி வேண்டுவோர் எந்த நேரமும் கோட்டை வாசலில் தொங்கும் கயிற்றினை இழுத்து இந்த மணியை ஒலியை முப்பின் மன்னன் உடன் வந்து விசாரித்துத் துயர் தீர்ப்பான் என்றும் கூறுகின்றது. இவற்றை விட,

● எல்லாளனுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் பிள்ளைகளாவார்கள். மகனின் பெயர் வீதி விடங்கன். ஒருநாள் ஒரு தேரில் திசாவாவியை நோக்கி எல்லாளனின் மகன் பயணப்பட்ட போது, வழியில் பசுவுடன் படுத்திருந்த கன்றின் கழுத்தின் மேல் தேர்ச்சில் ஏறியதால், கன்று அவ்விடத்தில் இறந்து விட்டது. தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்து எல்லாளனிடம் நீதி கேட்டது. எல்லாளன் தனது மகனின் தலையைத் தேர்க்காலிலிட்டு அதே விதமாக மரண மேற்படுத்தி நீதி வழங்கினான்.

● பாம்பொன்றுக்கு இரையான குஞ்சையிழந்த தாய்ப் பறவை ஆராய்ச்சி மணியை அடித்தது. மன்னன் அந்தப் பாம்பினைப் பிடித்து வரச் செய்து, அதன் வயிறு கீறப்பட்டுக் குஞ்சு வெளியில் எடுக்கப்பட்டது. பின்னர் பாம்பு மரத்தில் தொங்க விடப்பட்டது.

● ஒரு வயோதிப மாது வெயிலில் அரிசியைக் காயப்போட்டிருந்த போது, பருவம் தப்பிப் பொழிந்த மழையால் அரிசி முழுவதும் பழுதடைந்து போனது. அவள் எல்லாளனிடம் முறையிட்ட போது, அவன் வருணனிடம் வாரத்திற்கொரு தடவை இரவில் மட்டும் மழை பொழிய வேண்டுதல் விடுத்ததாக மகாவம்சம் வருணிக்கிறது.

மகாவம்சம் கூறுகின்ற ஒரு கதை எல்லாளன் பௌத்த மதத்தை ஆதரவளித்து போற்றிப் பாதுகாத்தான் என்பதையும் நிரூபிக்கின்றது. தன் தாய் மரணித்ததை அறிந்த எல்லாளன் தேரிலேறி சேத்திய கிரி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, தேரின் அச்சு தாதுகோபமொன்றில் பட்டு தாது கோபத்திற்குச் சேதத்தை ஏற்படுத்தியது. மன்னன் தேரினின்றும் கீழே குதித்து, தனது தலையை உடனடியாகச் சீவிவிடுமாறு, அமைச்சர்களிடம் கூறினான். "தெரியாமல் நிகழ்ந்தது அமைதியடைக. தூபத்தைத் திருத்திவிடுவோம்" என்றனர் அமைச்சர்கள். பதினைந்து கற்களே சிதைவடைந்திருந்தன. அப்படியிருந்தும் அந்தத் தாதுகோபத்தை புனரமைக்க எல்லாளன் பதினையாயிரம் கஹாப் பணங்களைச் செலவிட்டதுடன் தன் தாயின் இறுதிக்கிரியைக்குச் செல்லாமல் தாது கோபம் புனரமைக்கும் வரை அங்கேயே தங்கியிருந்தான் என்பதாகும்.

எனினும் இதே விடயம்இன வெறியை தூண்டுவதற்காக விகாராமகாதேவியால் பயன்படுத்தப்படுவதையும் மகாவம்சம் நியாயப்படுத்தி கூறுகின்றது. அதில் விகாராமகாதேவி தன் மகன் துட்டகாமினியிடம் "எல்லாளன் அங்கு (அநுராதபுரத்தில்) பௌத்த விகாரைகளை தேரால் இடித்து தரைமட்டமாக்கிறான்" என கூறுவதாக கூறப்பட்டுள்ளது.

**விகாரமகாதேவியும் எல்லாளனும்**

கல்யாணி இராசதானியின் மன்னன் களனி தீசனின் மகளே மகாதேவியாவாள். பின்னாளில் இவள் விகாரமகாதேவி என அழைக்கப்பட்டாள். விகாரமகாதேவியின் தாயாரான களனிதீசனின் மனைவி சித்ததேவி களனிதீசனின் தம்பியாருடன் கள்ள உறவு கொண்டிருந்ததாக மகாவம்சம்கூறுகிறது. பின்னாளில் எல்லாளனின் தோல்விக்கு விகாரமகாதேவியே மிக முக்கிய காரணமாகிறாள். எல்லாளனின் வலுவான கோட்டைகளாய் நிலவிய மகேலநகரக் கோட்டையின் தளபதியான மகேலனையும் அம்பதித்தகக் கோட்டையின் தளபதியான தித்தம்பனையும் தன் அழகையும் மணம் செய்வதற்காக ஆசையும் காட்டி சூழ்ச்சியால் கைப்பற்றிக் கொள்கிறாள். இதை மகாவம்சம் போர்த் தந்திரோபாயம் என வர்ணிக்கிறது.

உருகுணையின் மன்னனான காக்கவண்ணதீசன் ஆட்சிபீடம் ஏறுவதற்காக உருகுணையின் தமிழ் இளவரசி அயிஸ்வரியாவை மணந்திருந்தான். பின்னர் பௌத்த இளவரசே ஆட்சிக்கு வரவேண்டுமென்ற தன் ஆசையினால் விகார மகாதேவியினை மணந்தான். திருமணத்தின் பின் துட்டகாமினியைக் கருவில் கொண்டிருந்த போது தன் கணவனிடம் மூன்று ஆசைகளை வெளிப்படுத்தியிருந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.

(1) பிக்குகளுக்கு வழங்கித் தானும் பருகக் கூடிய பெரிய தேன் அடை.

(2) எல்லாளனின் படைத் தளபதி ஒருவனின் தலையைச் சீவிய இரத்தம் தோய்ந்த வாளினைக் கழுவிய நீரை அருந்த வேண்டும்.

(3) அநுராதபுரத்தின் வாடாத தாமரைகளால் மாலைகட்டி அணிய வேண்டும்.

இந்த மசக்கை ஆசைகள் நிறைவேற்றப்பட்டன.

**துட்டகைமுனுவும் எல்லாளனின் மரணமும்**

காக்கவண்ண தீசனினதும் விகாரமகாதேவியினதும் மூத்த மகன் காமினி அபயன் ஆவான். இவன் தந்தையின் சொல் கேளாது இருந்தமையால் பிற்காலத்தில் துட்ட காமினி என அழைக்கப்பட்டான். துட்டகாமினி கருவிலிருந்தே தமிழருக்கெதிராக உருவாக்கப்பட்டவன். துட்டகாமினி ஒருமுறை கட்டிலில் கால்களை முடக்கிப் படுத்திருந்த போது தாய் ஏன் என வினாவினாள். அதற்கு "வடக்கே தமிழரும் தெற்கே சமுத்திரமும் நெருக்கும் போது எப்படியம்மா கால்களை நீட்டி படுக்க முடியும்" என்றான்.

இவ்வாறு கருவிலிருந்தே இன வெறியூட்டப்பட்டு வளர்த்த துட்டகாமினி தன் தந்தையின் மறைவிற்குப் பின் பெரும்படையுடன் எல்லாளனின் மீது படையெடுத்தான். இப்படையெடுப்பை பற்றிய போதிய ஆதாரங்கள் மகாவம்சத்தில் காணப்படுகின்றது. இறுதி யுத்தமானது விஜிதபுரவில் நடைபெற்றதாக கூறப்படுகின்றது. எவ்வளவு முயன்றும் துட்டகைமுனுவால் எல்லாளனின் போர்த் தந்திரமையை வெற்றி கொள்ள முடியவில்லை. அவனது படையிலே இறப்புக்கள் அதிகமாக காணப்பட்டதாக சான்றுகள் கூறுகின்றன. அதனால் எல்லாளனை தனிச் சமருக்கு அழைத்தான். துட்டகைமுனு சதியினாலே எல்லாளனைக் கொன்றதாக சில வரலாற்று ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

**விஜய வம்சம்**

**துட்டகைமுனு (கி.மு. 161 -137)**

துட்டகைமுனு அல்லது துட்ட காமினி என்பவன் இலங்கை வரலாற்றில் கி.மு. 161 முதல் கி.மு. 137 வரை ஆட்சி செய்ததாக மகாவம்சம் நூலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு அரசனாவான். இவனே அநுராதபுரத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த தமிழ் அரசனான எல்லாளனுடன் போரிட்டவனாவான். எல்லாளன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த காலத்தில் கிரிந்தி ஓயா நதிக்கரையில் மாகமத்தை (மாகாமம்) தலைநகராகக் கொண்டு மன்னன் காவந்தீசன் ருகுணையை ஆட்சி செய்தான். காவந்தீசன் துட்டகைமுனுவின் தந்தையாவான்.

துட்டகைமுனுவை, சிங்கள அரசனாகவும் மாபெரும் வீரனாகவும் இலங்கை முழுதும் பௌத்தம் பரவுவதற்கு காரணமானவனாகவும் மகாவம்சம் இவனை போற்றி புகழ்கிறது.

இவன் எல்லாளனை தோற்கடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடேயே வளர்ந்தான். இவன் சிறிது பெரிதானதும் தனது தந்தையிடம் முதல்முறையாக "எல்லாளனுடன் போர் செய்யப் போகிறேன்" என்று கேட்டான். அதற்கு அவனது தந்தை இப்பொழுது உன்னால் எல்லாளனுடன் போர் செய்ய முடியாது என்றார். சிறிது காலத்தின் பின் இரண்டாவது முறையாக தனது தந்தையிடம் "எல்லாளனுடன் போர் செய்யப் போகிறேன்" என்று கேட்டான்.

அவனின் தந்தை திரும்பவும் அதே பதிலையே சொன்னார். மூன்றாவது முறையாகக் கேட்ட பொழுதும் அவனது தந்தை அதே பதிலளித்ததால் அவன் தனது தந்தையுடன் கோபித்துக் கொண்டு பெண்கள் அணியும் ஆடை ஆபரணங்களை அனுப்பி "நீ ஒரு கோழை என்பதாலேயே பெண்களைப் போல் பயப்படுகின்றாய். இதை அணிந்து கொண்டிரு" என்று கூறி விட்டு மலைநாட்டிற்குச் சென்று விட் டான். அவன் இந்த இழிய செயலை செய்ததால் அவனுடைய பெயரில் துட்ட என்ற பெயரை சேர்த்து துட்டகைமுனு என்று அழைத்தனர்.

அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு சுமார் நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்த எல்லாளனுடன் போர் தொடுத்த துட்டகைமுனுவின் படைகள் எல்லாளன் படையிடம் தோற்று பின்வாங்க ஆரம்பித்தன, போரில் தோல்வியை தவிர்ப்பதற்காக துட்டகைமுனு சாதூரியமாக, எல்லாளனை ஒற்றைச் சமருக்கு அழைக்க, யுத்த தர்மத்தின் படி எல்லாளனும் அதை ஏற்று போர் புரிந்தான், நீண்டநேர சமருக்கு பிறகு, வயோதிபனான எல்லாளனை, துட்டகைமுனு வெற்றி பெற்றான். இறந்த எல்லாளனின் வீரத்தை மெச்சி, அவனுக்கு சிலை எழுப்பி, மரியாதை செய்தான். றுகுணை இராச்சியத்தையும் அநுராதபுரத்தையும் இணைத்துக் கொண்டு துட்டகைமுனு அரசன் இலங்கையை ஒன்றிணைத்தான்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வங்கிகள்...

உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்காக கடந்த வியாழன் முதல் நேற்று வரை வங்கிகள் மூடப்பட்டிருந்தன.

வங்கிகள் மூடப்பட்டதுடன் கொழும்பு பங்குச் சந்தையும் ஐந்து நாட்களுக்கு மூடப்பட்டிருந்தது.

நாடு முழுவதிலும் உள்ள அனைத்து வங்கிக் கிளைகளும் இன்று முதல் வழமைபோல் திறக்கப்படும். வாடிக் கையாளர்கள் தங்கள் சேவைகளைப் பெறலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள் ளது. (4-7)

## மீன்பிடிக்கச்...

மல்போன நிலையில் ஒரு மீனவர் நேற்று திங்கட்கிழமை காலை சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட மீனவர் பரப் பாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான விசுவா (வயது-57) என தெரிய வந்துள்ளது.

காணாமல்போன மற்றைய மீனவ ரான பரப்பாங்கண்டல் பகுதியைச் சேர்ந்த விசுவாசம் சந்திரகுமார் பர் னாந்து (வயது - 37) என்ற மீனவரை தேடி வருகின்றனர்.


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 03/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1619
கடகம் 7 2 4 5 0 0
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.07.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1194
G 16 23 58 78
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.07.03
சீட்டிழுப்பு இலக்கம் 3406
I 14 27 28 45
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 03/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1512
Q 12 01 28 60 66

HANDAHANA
திகதி 2023.07.03
சீட்டிழுப்பு இலக்கம் 473
துலாம் 05 37 51 62 துலாம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/07/03
சீட்டிழுப்பு இலக்கம் 5164
U 0 2 8 4 7 3
தேசிய லொத்தர் சபை


மீட்கப்பட்ட சடலம் மன்னார் வைத் தியசாலைக்கு கொண்டு செல்லப்பட் டுள்ளது.

உயிலங்குளம் பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (4-7,285)

## விரைவில்...

ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தொடர்பில் நாடு முழுவதிலும் தெளிவு படுத்தல் நடவடிக்கைகளை முன்னெ டுத்து வருவதாக அவர் தெரிவித்துள் ளார்.

ஆசிரியர்களின் சம்பள முரண் பாட்டு பிரச்சினை தொடர்பில் அரசாங் கம் வழங்கிய வாக்குறுதி தொடர்ந்தும் நிறைவேற்றப்படாத நிலையில் நீடிப்ப தாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் வரவு செலவு திட்டத் திற்கு முன்னதாக தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்து அதன் ஊடாக வரவு செலவு திட்டத்தில் சம் பளத்தை அதிகரித்துக்கொள்ள நட வடிக்கை எடுக்கப்படும் என பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (4-7)

## உயிரைப் பறித்த...

சேர்ந்த 27 வயதுடைய ராஜன் மோகன தாஸ் என்ற இளைஞனே உயிரிழந் துள்ளார்.

மேற்படி இளைஞர் முகநூல் வழி யாக பெண் ஒருவரை காதலித்து வந்த தாகவும் அவர் தொடர்பை துண்டித்த தன் காரணமாக மனமுடைந்தவர் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற் கொண்டார். (4-7,60)

## ஒன்றரை வயது...

உயிரிழந்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை வலைப்பாடு, பூநகரியைச் சேர்ந்த 21 மாதங்களேயான இமானுவேல் தர் ஷன் சாதுர்சன் என்ற குழந்தையாகும்.

மேற்படி குழந்தையை பெற்றோர் அழைத்துக் கொண்டு சிலாபத்துறை யில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு பூப்புனித நீராட்டு விழாவுக்குச் சென்ற தாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை, 9 அடி நீளமும் இரண்டரை அடி உயரமும் உள்ள இடையில் தூண் போடாத மதில் உள்ள நிலையில், மதிலின் வெளிப்புறம் குழந்தை நின்றதாகவும் மதிலின் உட்புறம் குழந்தையின் தந்தை யும் தாய் மாமனும் நின்றதாக தெரிவிக் கப்பட்டது.

இதில் இரண்டரை அடி உயர மதில் மேலால் குழந்தையை தூக்க தாய் மாமன் முற்பட்ட சமயம் மதில் இடிந்து குழந்தை மீது விழுந்துள்ளது. படுகாயங்களிற்குள்ளான குழந்தை உடனடியாக சிலாபத்துறை வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பல னின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

இம்மரணம்தொடர்பில்யாழ் போதனா வைத்தியசாலை திடீர் மரண விசா ரணை அதிகாரி நமசிவாயம் பிறேம குமார் விசாரணைகளை மேற்கொண் டார். (4-7,60)

## ரி.என்.ஏ...

வாக்கும் நடவடிக் கைகள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் அந்த செயற்பாடு கள் நிறைவடைந் ததன் பின்னரே தேர்தல்கள் ஆணைக் குழு வுக்கு தங்களது கோரிக்கைகள் முன் வைக்கப் படும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## நிறைவடைந்தது...

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக் கில் தையிட்டிப் பிரதேசத்தில் தனியார் காணியை ஆக்கிரமித்து இராணுவத் தினரால் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோத திஸ்ஸ விகாரைக் சட்ட மானத்தை அகற்றுமாறு கோரியும், அதனைச் சுற்றியுள்ள தனியார் காணி களை உட னடியாக உரிய வர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென வலி யுறுத்தி யும் தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணியளவில் நான்காம்கட்டமாக ஆரம் மான தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று திங்கட்கிழமை மாலை 5.45 மணி யுடன் நிறை வடைந்துள்ளது.

முழுநோன்மதி போயா தினத்தை முன்னிட்டு நேற்று மேற்படி விகாரை யில் விசேட வழி பாடுகள் இடம் பெற்ற நிலையி லேயே இரண் டாவது நாளாக வும் கவனயீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டி ருந்தமை குறிப் பிடத்தக்கது. (4-7,33)

*(முன்னர் வந்த செய்தி உள்ளே)*

## கடன்...

உறுப்பினர்கள் அந்த சந்தர்ப்பத் தில் சபையில் காணப்படவில்லை என ஐக்கிய மக் கள் சக்தியின் தேசிய அமைப் பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர் பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலம் பலவந்த மாகவே நிறை வேற்றிக் கொள் ளப்பட்டுள்ளது. காரணம் முழு மையான விவா தம் நிறை வடை ந்த பின்னரே வாக் கெடுப்பு நடத்தப் படும் என சபா நாயகர் ஆரம் பத்தில் அறிவித் திருந் தார்.

ஆனால் திடீ ரென 7.30 மணி யளவில் சகல விவாதங்களை

# ஆ.அ.வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராக டாகஃபுமி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராக டகாஃ புமி கடொனோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரைகாலமும் ஆசிய அபி விருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளராகப் பணியாற்றிய சென் செனின் பதவிக்காலம் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

நிறுத்தி வாக்கெடுப்புக்கு செல்வதாக அறிவித்தார். இதனால் பெரும்பாலான பாராளு மன்ற உறுப்பினர்கள் குறித்த நேரத்தில் சபையில் இருக்கவில்லை.

தேசிய கடன் மறுசீரமைப்பினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12 டிரில்லியன் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீது இவ்வாறு பாரிய சுமையை சுமத்தியிருப்பது பெரும் தவ றாகும். சர்வதேசத்திடம் கடன் பெற்று தமது ஆட்சியை மேலும் சில ஆண்டு களுக்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கையையே அரசாங்கம் இதன் மூலம் எடுத்துள்ளது என்றார். (4-7)


SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2138 | நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.07.03 | தினம் திங்கட்கிழமை
X 01 17 45 75
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,764,760/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.07.03
வெற்றி வாரம்: 4299
வர்ணம்: இளம் நீலம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,000,000.00
வெற்றி இலக்கங்கள் 02 11 59 65
ஆங்கில எழுத்து L

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,559,714.40
திகதி 2023-07-03
வெற்றி வாரம் 3850
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 01 26 42 58
மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,315,760/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 12 16 50 75 76
சீட்டிழுப்பு வாரம் 1314
வர்ணம் பசுமை
திகதி 2023.07.03
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 342,803,009.80
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா Jayoda
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2023.07.03
வெற்றி வாரம்: 1935
வர்ணம்: செம்மஞ்சள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,549,231.60
வெற்றி இலக்கங்கள் 06 12 43 57
ஆங்கில எழுத்து D
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 1964
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2023.07.03
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 54,907,857.80
வெற்றி இலக்கங்கள் 33 34 44 77
ஆங்கில எழுத்து W


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- ஒரு பரப்பின் விலை 150,000/= (ஒன்றரை இலட்சம்) ரூபாய் மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(16187)

**076 826 0354, 076 057 0354**


# யுவதியை தாக்கிய பொலிஸ் பணி இடைநிறுத்தம்

தனமல்வில, ரணவர பிரதேசத்தில் வசிக்கும் யுவதி ஒருவரின் வீட்டிற்குள் பலவந்தமாக நுழைந்து, யுவதியைத் தாக்கி காயப்படுத்திய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

சந்தேக நபரின் காதலி என கூறப்படும் யுவதி ஒருவரே இவ்வாறு தாக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவில் கடமையாற்றும் பயிலுனர் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு பணி இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பில் திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றத்திலும் அறிக்கை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(4-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16189)

**076 825 7716** (ஆகாஸ்)



## சரவணபவன் பென்சி கவுஸ் இன் மாபெரும் ஆடித் தள்ளுபடி

**கொழும்பு மொத்த விலையில் 30% விலைக்கழிவுடன் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.**

**பிளாஸ்ரிக் பொருட்கள், கிறீம் வகைகள், பான்சி வகைகள், பாட்டா வகைகள், சில்வர், மாபிள், அலுமினிய பொருட்கள், சோடனைப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூட்டு வகைகள், தையல் உபகரணங்கள், அன்பளிப்பு பொருட்கள், மொடன் பட்டின் வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மாஸ் வகைகள், குடை வகைகள், கவரின் வகைகள், பாடசாலை உபகரணங்கள், பாக் வகைகள் இன்னும் பல பொருட்கள் ஒரே இடத்தில் மலிவாக பெற்றுக் கொள்ளலாம்.**

உரிமையாளர் :

**தே. கலைத்தாசன் (கரன்)**

26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம்.

**021 315 5900** (16187)



## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பஸ் சேவை இனி வரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில்...

கட்டணம் - 2800/=

(16033)

**T.P:077 544 8503**



## ஆசிரியர் தேவை

உரும்பிராயில் உள்ள கல்வி நிறுவனத்திற்கு தரம் 6-11 ஆங்கிலப்பாட ஆசிரியர் தேவை.

(C-6862)

**077 912 4035**



## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

VISA • STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

(C-6863)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

**0777-068-777**



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்

- கிளிநொச்சி • சுன்னாகம்
- சாவகச்சேரி • மானிப்பாய்
- நெல்லியடி • பருத்தித்துறை
- திருகோணமலை • வல்வெட்டித்துறை
- கோப்பாய் • புத்தூர்
- பண்டத்தரிப்பு • சங்கானை
- கொழும்பு

(C-6863)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)

அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777

v2vacancies@gmail.com


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 1952 - 07 - 14

மறைவு 2023 - 07 - 01

## தம்பு (பத்மநாதன்) தனலட்சுமி

காளிகோவிலடி தாவடி வடக்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தனலட்சுமி அவர்கள் 01.07.2023 அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடேசு - தையலம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகளும் தம்பு அவர்களின் அன்பு மனைவியும் ருக்மணி, கைலாயநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் குகதாஸ், காலஞ்சென்ற சதீஸ் மற்றும் றஞ்சித், நிரோஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜிதா, மேனகா, பிரசாத் ஆகியோரின் மாமியாரும் கனுஜா, அபிசயன், மஜித், கேனுஜா, இந்துஜன், சேனுஷாத், பிரதிஸ்ஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற றஞ்சிதமலர் மற்றும் பத்மராணி, ஜெயக்குமாரி காலஞ்சென்ற சிவகுமாரி மற்றும் செல்வராணி, சண்முகராசா, சாந்தமணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04.07.2023 இன்று செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

காளி கோவிலடி,
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:- மருமகன்
இ.தர்சன் (SRP Motors)
077 538 0061

(16180)

# மரண அறிவித்தல்



## இராசதுரை அருளானந்தம்

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கு பத்தானை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை அருளானந்தம் அவர்கள் 01.07.2023 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை-மனோன்மணி தம்பதிகளின் புதல்வரும், காலஞ்சென்ற அப்பாக்குட்டி மற்றும் நாகம்மாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், சந்திரசேகரம், குமாரகுலசிங்கம், பரமானந்தம் மற்றும் புஸ்பலீலா, மங்கலேசுவரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அமிர்தராஜ் மற்றும் அருள்குமரன், வசிகரன், அரவிந்தன், அஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், அனித்தா, டனுஜா, தமிழினி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும் சபியா, மெர்சியா, ஆத்வி, மகிசா, ருத்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் புஸ்பரத்தினம் சண்முகலிங்கம் காலஞ்சென்ற அன்னலிங்கம் மற்றும் மனோன்மணி, விசாலாட்சி, சிவபாக்கியலட்சுமி, வரதலீலா, பவானி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 04.07.2023 செவ்வாய்க்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
077 652 3229
காந்தன்

(16185)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 121, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org